# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண். 18/2021

வா.சா.1– முதல் விசாரணை தொடர்ச்சி – நாள் 11–07–2024.

பெயர் = ராதாகிருஷ்ணன் வா.சா.–1

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி வாதி தரப்பில் முதல் விசாரணையின் தொடர்ச்சி.–

இந்த வழக்கில் நான் ஏற்கனவே நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து முதல் நிலை சாட்சியம் அளித்துள்ளேன். தற்போது கூடுதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை எனது கூடுதல் முதல்நிலை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

அசல் வழக்கு எண். 140/2019 ல் ஏற்பட்ட தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.–1** ஆகும். 05–06–1995 ம் தேதியிட்ட குடும்ப ஏற்பாடு என்னும் பாகப்பிரிவினை விவர பட்டியலின் நீதிமன்ற சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.–2** ஆகும். ஆழவந்தார் ரெட்டியார் மகன் சின்னச்சாமி பெயரில் உள்ள கணினிப்பட்டா எண். 978 இணையதள நகல் **வா.சா.ஆ.–3** ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி வேண்டுகோளுக்கிணங்க கு.வி. ஒத்தி வைக்கப்படுகிறது.